

வேலூர் மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி அவர்களின் தம்பி முகமது சாதிக் இயற்கை எய்திய தகவலறிந்து அவரது வீட்டுக்கு கழக பொதுச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நேரில் சென்று தி.அ.முகமதுசகி குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் சாதிக் குடும்பத்தினர், உறவினர்கள் உள்ளனர்.

### வேலூர் மாவட்ட அவைத்தலைவர்

# தி.அ.முகமதுசகி தம்பி தி.அ. முகம்மது சாதிக்!

## அமைச்சர் துரைமுருகன் நேரில் சென்று ஆறுதல்!

வேலூர், மே 14 -

வேலூர் மாவட்ட கழக அவைத்தலைவர் தி.அ.முகமதுசகிஅவர்களின்தம்பி தி.அ.முகமது சாதிக் இயற்கை எய்தினார்.இதையடுத்து அவரது வீட்டிற்கு கழக பொதுச்செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நேரில் சென்று தி.அ.முகமதுசகியிடமும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், பகுதி செயலாளர் வன்னியராஜா அரசு வழக்கறிஞர் எம்.பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் மறைந்த சாதிக் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

தி.அ.முகமது சாதிக் அவர்களின் இல்லத்திற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம் காதர் மொய்தீன், மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முகமது அபூபக்கர் முன்னாள் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.அப்துல் ரகுமான் , மாநகர தலைவர் கே.எல். முஹம்மத் ஹனீப் ,மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கே. அய்யூப் பாஷா, மாவட்ட தலைவர் சபீர் கான், மாவட்ட துணைத் தலைவர் ஸ்வீட் பாபு, மாநகர செயலாளர் ஷகீல் அஹமத், மாநகர பொருளாளர் குல்சார் அஹமத், இளைஞரணி மாநில துணைத் தலைவர் அப்துல் ரஹீம், இளைஞர் அணி மாவட்ட தலைவர் அக்பர் பாஷா, இளைஞர் அணி மாவட்ட செயலாளர் மசூத் கான், உள்ளிட்டோர் நேரில் வந்து ஆறுதல் கூறினர்.

### தேனி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள

# மங்கலதேவி கண்ணகி திருக்கோயில் சித்திரை முழு நிலவு திருவிழா!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, மே 14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (12.05.2025) தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லையில் வண்ணாத்திப்பாறையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி திருக்கோயில் சித்திரை முழு நிலவு திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் இத்திருக்கோயிலை புனரமைப்பது தொடர்பாகவும், மலைப் பாதையை சீரமைப்பது தொடர்பாகவும் கள ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மங்கலதேவி கண்ணகி திருக்கோயில் திருவிழா ஆண்டுதோறும், சித்திரை மாதம் முழு நிலவு அன்று தேனி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வண்ணாத்திப்பாறையில் கண்ணகி விண்ணுலகம் சென்றதாக கருதப்படும் மலை உச்சியில், சேரன் செங்குட்டுவ மன்னரால் அமைக்கப்பட்ட கோயிலில் தேனி மற்றும் இடுக்கி மாவட்ட மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்திருவிழாவினை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் தமிழக மற்றும் கேரள மாநில வருவாய்த்துறை, வனத்துறை, காவல்துறை மற்றும் பிற துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் கூட்டம் நடத்தப்பட்டு, பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசு தேனி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்துள்ளது.

மங்கலதேவி கண்ணகி திருக்கோயிலை முழுவதுமாக புனரமைத்து, பக்தர்கள் வருகின்ற பாதையையும் சீரமைத்து ஆண்டுக்கு ஒருமுறை தரிசனம் என்று இல்லாமல் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று இத்திருக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு தமிழ்நாடு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, இரு மாநில பக்தர்களின் நலன் கருதி, கண்ணகி திருக்கோயிலை சீரமைப்பது தொடர்பாக ஆய்வு செய்வதற்கும், இரு மாநில அறநிலையத்துறை அமைச்சர்கள் சந்தித்து பேசுவது தொடர்பாகவும், சபரிமலை சுவாமி ஐயப்பன் திருக்கோயிலுக்கு செல்கின்ற பக்தர்களின் பாதுகாப்பு கருதி அப்பகுதியில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் பக்தர்கள் தங்கும் விடுதி அமைப்பதற்கும், அவ்விடத்தை பராமரிப்பதற்கும் அனுமதி கோரி, கேரள மாநில முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபோது நானும், துறையின் செயலாளரும் நேரில் சந்தித்து கோரிக்கை வைத்து கடிதம் அளித்தோம்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என். இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.சிவபிரசாத், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக வனபாதுகாவலர் மற்றும் துணை இயக்குநர் ஆனந்த், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் கார்த்திக், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது மற்றும் இரு மாநில அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவம்பட்டி ஊராட்சியில்

# தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

செஞ்சி,மே 14-

விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் சிறப்பு முகாம் வல்லம் ஒன்றியம் திருவம்பட்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினர் செஞ்சி சிவா தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட உதவி ஆணையர் ராஜசேகரன் அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து திருவம்பட்டு, கப்பை ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடல் உழைப்பு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரிய சிறப்பு முகாமில் உறுப்பினர் பதிவு செய்தல், உறுப்பினர் பதிவு புதுப்பித்தல், உதவித் தொகை, ஓய்வூதியம் ஆகிய திட்டங்களுக்கு ஏராளமானோர் கலந்து கொண்டு பதிவு செய்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் துரை, இளம்வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமார், இளங்கோவன், மாவட்ட கவுன்சிலர் சசிகலா மோகனசுந்தரம், ஊராட்சி மன்ற தலைவர் முருகன்,

ஒன்றிய நிர்வாகி கள்கம் மந்தூர் கண்ணன், கொங்கரப்பட்டு கண்ணன், முருகன், திருவம்பட்டு கிளைக் கழக நிர்வாகிகள் நாராயணசாமி, ராஜேந்திரன், பன்னீர் ,தனுசு, சத்யராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் தச்சநல்லூர் பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறையில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ பங்கேற்று சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.நிகழ்வில் தலைமை கழகப் பேச்சாளர் தாமரை பாரதி,அகமது சுல்தானா,முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,துணை மேயர் ராஜ்,மாமன்ற உறுப்பினர் கோகுல வாணி மற்றும் ஸ்டார் முருகன் முத்துராமன்,சீனிவாசன்,சிந்து முருகன் ராஜா செல்வம் பிரேம் கணேசன் மணிகண்டன் வின்சென்ட் வினோத் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் சுமார் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



நெல்லை கிழக்கு மாவட்டம் பாளை யங்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர், பாளை ஊராட்சி ஒன்றிய குழு தலைவருமான கே.எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக சிவந்திபட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் , தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி உள்பட பலர் உள்ளனர்.

### பாளையங்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர்

# கே.எஸ்.தங்கபாண்டியன் மறைவு!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு – கனிமொழி கருணாநிதி எம்.பி – அமைச்சர் பெ.கீதாஜீவன் – இரா. ஆவுடையப்பன் அஞ்சலி

நெல்லை,மே 14-

நெல்லை கிழக்கு மாவட்டம் பாளையங்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய குழு தலைவருமான கே.எஸ்.தங்கபாண்டியன் அவர்கள்(வயது 59) உடல் நலக்குறைவு காரணமாக சிவந்திபட்டியில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது இல்லத்திற்கு சென்று சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு,கழக துணை பொது செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதாஜீவன்,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் ஆகியோர் மறைந்த கே.எஸ்.தங்கப்பாண்டியன் அவர்கள் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

திருநெல்வேலி மாவட்டம் மறைந்த முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.கே. கோட்டையப்பன் அவர்கள் சகோதரரும், ஒருங்கிணைந்த பாளையங்கோட்டை ஒன்றிய கழக செயலாளராக 6 முறை கழகப் பணி ஆற்றியும்,நான்கு முறை சிவந்திபட்டி ஊராட்சி மன்ற தலைவராகவும் ,

தற்போது பாளையங்கோட்டை தெற்கு ஒன்றிய கழக செயலாளரும்,பாளையங்கோட்டை ஒன்றியக் குழு தலைவருமான கே. எஸ்.தங்கபாண்டியன் அவர்கள்(12.5.2025 திங்கட்கிழமை அன்று) அதிகாலையில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு,கழக துணை பொது செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம். எல்.ஏ.தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.

முன்னாள் அமைச்சர் மைதீன்கான், நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, நெல்லை ராபர்ட் ப்ரூஸ் எம்.பி.முன்னாள் எம்பி ஞான திரவியம், துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக்,பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவஐயப்பன், ராமச்சந்திரன்,கனகராஜ்,ஒன்றிய செயலாளர்கள் ஜெகதீஷ்,போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,

மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,முன்னாள் மேயர் சரவணன், இளைஞர் அணி அமைப்பாளர்கள் கருப்பசாமி கோட்டையப்பன், வில்சன் மணித்துரை,தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன் உள்பட அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள்,

பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நெல்லை,மே.14-

திராவிட மாடல் முதலமைச்சர்,நம் நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,

துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் இன்று (14ஆம் தேதி புதன்கிழமை) காலை 10 மணி அளவில் வண்ணார்பேட்டை ஆப்பிள் ட்ரீ கூட்ட அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.



இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்ப தாவது.

நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர்,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் ஆலோசனையின் படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் இன்று (14.05.2025-புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு,

வண்ணாரப்பேட்டை ஹோட்டல் ஆப்பிள் ட்ரீ கூட்ட அரங்கில்,

நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது .

இந்நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்று கிறார்கள்.

நிகழ்வில் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாக.கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காடு வடக்கு ஒன்றியம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கடம்போடுவாழ்வில் ஒன்றிய செயலாளர் செல்வ கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.அதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் தி.மு.க மாநில பேச்சாளர் ஜஸ்டின் வில்பிரட்,ராமசாமி,ரவி, சங்கரன்,சாமுவேல், ஐயப்பன், கணேஷ்குமார் ஆதித்தன், ஜார்ஜ் கோசல்,மாடசாமி,யாக்கோபு, கருப்பசாமிபாண்டியன்,அருள் ஜோதி, சாந்தி கருப்பசாமி,தங்கதுரை, லட்சுமணன் உள்பட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.